

டி.என்.பி.எல். மெட்ரிக் பள்ளி சார்பில் போதை பொருள் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்ற போது எடுத்த படம்.

### டி.என்.பி.எல். மெட்ரிக் பள்ளி சார்பில்

# போதை பொருள் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வு

வேலாயுதம்பாளையம், ஜூலை.10—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள டி.என்.பி.எல். மெட்ரிக் பள்ளி சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் துணைப்பொது மேலாளர் சக்தி, டி.என்.பி.எல். பள்ளிகளின் செயலாளர் மற்றும் தாளாளர் செல்வராஜ் டி.என்.பி.எல். சிமெண்ட் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் (சிமெண்ட் இயக்கம் மற்றும் வணிகம்), டி.என்.பி.எல் பள்ளிகளின் இணைச் செயலாளர் தினகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

பி.ஜி.பி கல்லூரியின் அறுவை சிகிச்சை மற்றும் மயக்க மருந்து தொழில் நுட்பத்தின் பேராசிரியை அக்சயா போதைப் பொருள் பயன்படுத்துவதை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு தொடர்பான கருத்துகளை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் இதயத்துடிப்பு கண்காணிப்பு துறைத் தலைவர் பன்னீர் செல்வம் முன்னிலையில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் டி.என்.பி.எல். பள்ளித்துணை முதல்வர் உமாசந்திரன், பள்ளி ஒருங்கிணைப்பாளர் கீதா மற்றும் பள்ளியின் மாணவ, மாணவிகள், அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அரிய